This Page is a part of http://kasig1.yarlsoft.com/

# எனது வாழ்வில் திருப்பங்கள்

பகுதி - 1

நான் என்னைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்ய விரும்புகிறேன். என்னை விரும்புகின்ற எல்லோருக்கும் அது உதவியாக இருக்கும். நான் இலங்கைக்காரர் அல்லது ஈழ மண்ணில் பிறந்தவர். எனது சொந்த ஊர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மாதகல் ஆகும். என் இனம் இலங்கைத் தமிழர் ஆகும். எனது மதம் இந்து சமயம் ஆகும். பாலியல் நோக்கில் நானோர் ஆண் மகன்.



மாதகல் அமைதியான ஓர் அழகான சிற்றூர். இங்கே ஒருபுறம் வேளாண்மை செய்ய வயல் வெளியும் மறுபுறம் மீன்பிடிக்கக் கடலும் சூழ்ந்து இருக்கிறது. எனது ஊரவர் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். எனது ஊர் இந்தியத் தமிழ்நாட்டிற்கு அருகே உளளது. இங்கே எனது ஊரான மாதகலுக்கும் அங்கே தமிழ்நாட்டின் கரையூரான கோடியாக்கரைக்கும் இடையே இருபத்தாறு கடல் மைல் தூரம் இருக்கும். எனது அயல் ஊர்களாகச் சில்லாலை, பண்டத்தரிப்பு, விளான், இளவாலை, மாரீசன்கூடல் ஆகியன உள்ளன.

எனது தலைமுறை வழித்தோன்றலாக இலகுப்பிள்ளை - சொக்கி குடும்பத்தினர் இருந்தனர். அவர்களுக்கு இராமலிங்கம், வள்ளியம்மை என இரு பிள்ளைகள் இருந்தனர். பிரசித்த நொத்தாரிஸ் மற்றும் தமிழ்ப் பண்டிதராக இராமலிங்கம் விளங்கினார். அவர் பல பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அவர் பாடசாலை அதிபராகவும் பணியாற்றியுள்ளார். அவர் உறவுக்காரப் பெண்ணான செல்லமுத்து அவர்களைத் திருமணம் செய்திருந்தார். அவர்களது மூத்த மகனாகிய இராமலிங்கம் காசிராசலிங்கம் என்பவரே எனது தந்தை ஆவார். எனது தந்தை ஓர் தபாலதிபரும் ஆவார்.

வள்ளியம்மை அவர்கள் அடிப்படைக் கல்வியைக் கற்றிருந்தார். அவர் உறவுக்காரரான விநாயகமூர்த்தி என்ற ஆணைத் திருமணம் செய்திருந்தார். விநாயகமூர்த்தி அவர்கள் உயர்ந்த கல்வித் தகமை கொண்ட உடையாராகப் பணியாற்றியுள்ளார். அவர்களது மூத்த மகளாகிய விநாயகமூர்த்தி பரமேஸ்வரி

**This Page is a part of http://kasig1.yarlsoft.com/**

என்பவரே எனது தாய் ஆவார். எனது தாயும் அடிப்படைக் கல்வியைக் கற்றிருந்தார்.

தற்போது நீங்கள் எனது பெற்றோராகிய தபாலதிபர் காசிராசலிங்கம், பரமேஸ்வரி ஆகிய இணையரை அறிந்திருப்பீர்கள். அவர்களுக்கு ஜீவலிங்கம், யோகலிங்கம், ஞானலிங்கம், இந்திரலிங்கம், கோமளாதேவி ஆகிய பிள்ளைகள் பிறந்திருந்தனர். இலங்கை இனமோதல் (போராட்டம்) காரணமாக ஞானலிங்கம் அவர்கள் சாவடைந்துவிட்டார். நான் தான் காசிராசலிங்கம், பரமேஸ்வரி ஆகிய இணையருக்கு மூத்த மகன் ஆவேன்.

எனது தாயின் கல்வியறிவு குறைவு. ஆயினும், எனது தந்தை ஒரு தபாலதிபர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் எனது தந்தை திறமை பெற்றிருந்தார். எனது குழந்தைப் பருவத்தில் எனது தந்தை எனது மாவட்டத்திற்கு வெளியே பிற மாவட்டங்களிலே பணியாற்றியுள்ளார். ஆகையால், நான் எனது தாயின் அரவணைப்பிலே இருந்தேன். அவ்வேளை எனது கல்விக்கான பின்னூட்டம் போதுமானதாக இருக்கவில்லை.

தனது தந்தை (எனது அப்பப்பா) ஒரு தமிழ் பண்டிதர், அவரைப் போலப் படிச்சுப் பெரியாளாக வேண்டுமென எனது தந்தையின் சகோதரர் (சித்தப்பா) எனக்கு அறிவுரை கூறியிருந்தார். தனது தந்தை (எனது அம்மப்பா) ஓர் உடையார் (உயர்ந்த கல்வித் தகுதி), அவரைப் போலப் படிச்சுப் பெரியாளாக வேண்டுமென எனது தாயின் சகோதரி (சின்னம்மா) எனக்கு அறிவுரை கூறியிருந்தார்.

பதின்ம (11-19) அகவைக் காலத்தில் நான் அவர்களது அறிவுரையைப் பொருட்படுத்தவில்லை. அதனால் நான் சரியான வழியைத் தெரிவு செய்யவில்லை. அதன் காரணமாகக் கெட்ட பெயரோடு துயரங்களையும் இழப்புகளையும் சந்திக்க வேண்டியதாயிற்று. பின்னரே, நான் உண்மையாக நற்பெயரை ஈட்டிக்கொள்ளக் கற்றுக்கொண்டிருந்தேன். அந்நேரம் ஒரு படி முன்னேறினால் பல படி பின்னேறியுமிருந்தேன். எப்படியிருப்பினும் எனது கல்வியை நான் தொடர்ந்து கற்றுக்கொள்ள முயற்சி எடுத்தேன்.

ஒரு காலத்தில என்னிடம் நிறையப் பணம் இருந்தது. அந்நேரம் அதிக ஆள்கள் என்னைப் பின்தொடர்ந்தனர். இன்னொரு காலத்தில என்னிடம் பணமே இருக்கவில்லை. அந்நேரம் எந்தவொரு ஆளும் என்னைப் பின்தொடரவில்லை. மக்களாயக் (சமூகக்) கட்டமைப்பைக் கற்றுக்கொள்ள இந்தப் பட்டறிவு (அனுபவம்) எனக்கு வழிகாட்டியது. உண்மையாகவே என்னிடம் பணம்

இல்லாத வேளை, நான் கற்ற கல்வியே எனக்குத் துணையாக (உதவியாக) இருந்தது.

ஒரு காலத்தில நான் வெளிமாவட்டங்களில் (என்னூருக்கு, எனது மாவட்டத்திற்கு வெளியே) இடம்பெயர்ந்து இருந்தேன். அக்காலத்தில நான் சிக்கல் ஒன்றில் மாட்டுப்பட்டேன். அவ்வேளை எவரும் எனக்கு இருக்கவில்லை. ஆங்கே, எனக்கு எவரும் உதவவுமில்லை; வழிகாட்டவுமில்லை; அறிவுரை கூறவுமில்லை. அவ்வேளை எனது வாழ்வை மேலாண்மை செய்வதும் முடியாமல் தான் இருந்தது. எப்படியிருப்பினும் நான் தற்கொலை செய்யவில்லை. அவ்வேளை "வாழ்; வாழ விடு" என்பதையே கற்றுக்கொண்டேன். எனது வாழ்வில் நிகழ்ந்த இம்மாற்றங்களை எனது திறந்த உள்ளத்தில் இருந்து மொழிபெயர்க்கிறேன். இவை தங்களுக்கு உதவுமாயின் நான் மகிழ்ச்சி அடைவேன். எப்படியோ நீங்கள் நல்வழியைத் தெரிவு செய்ய வேண்டும்; அதேவேளை பண வருவாயின் பின்னூட்டமென விரும்பிக் கல்வியைக் கற்க வேண்டும்.

பகுதி - 2

மூன்று வழிகளில் கற்றுக்கொள்ள முடியும், அதாவது ஆசிரியர்களிடமிருந்து; நண்பர்கள் மற்றும் பிறரிடம் இருந்து; அத்துடன் ஊடகங்களில் (பத்திரிகைகள், பொத்தகங்கள், வலைப்பக்கங்கள், மற்றும் இவ்வாறானவற்றில்) இருந்து கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

எப்படி இருப்பினும் நான் முதலாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை முறைசார் கல்வியைக் கற்றிருந்தேன். ஆயினும் பட்டப்படிப்பு எதனையும் படித்து முடிக்க முடியாமல் போய்விட்டது. பின்னர் நான் முறைசாராக் கல்வி ஊடாகப் பல பாடங்களைக் கற்றுத் தேர்ந்தேன். ஆகையால், நீங்களும் முறைசார் கல்வியைத் தொடர முடியாமல் போனால்; அதேவேளை முறைசாராக் கல்வியைத் தொடர முடியும் என்பேன்.

எனது முழுப்பெயர் காசிராசலிங்கம் ஜீவலிங்கம். சுருக்கினால் காசி.ஜீவலிங்கம் ஆகும். எனக்கு எனது பெற்றோர் இட்ட பெயர் ஜீவலிங்கம் ஆகும். சட்ட ஆவணப் பெயர் இதுவே ஆகும். யாழ்பாவாணன் என்பது எனது புனைபெயராகும். சில இடங்களில் சிலர் என்னை வெவ்வேறு பெயர்களில் அழைப்பர். உயிரழகன், உயிரன், காசிஜீவன், ஜீவன், ஜீவா, ஜீவா மாஸ்டர், லெக்சரர் ஜீவா, ஜீவா சேர், டெவலெப்பர் ஜீவா எனப் பல பெயர்கள் உண்டு.

**This Page is a part of http://kasig1.yarlsoft.com/**

எப்போதும் நாம் இலகுவாக ஓராளை அடையாளப்படுத்திக் கொள்ளவே அவரது பெயரைப் பொருட்படுத்துகிறோம். உண்மையில் ஒருவருக்கு இரண்டு பெயர்கள் அமையும். முதலாவதாகப் பெற்றோர் இட்ட பெயர். இரண்டாவதாக அவரே தேடிக்கொண்ட பெயர். அதாவது, நல்லன செய்திருப்பின் நற்பெயரும் கெட்டன செய்திருப்பின் கெட்ட பெயரும் ஈட்டிக்கொள்ள முடியும்.

1969 ஐப்பசி 7 எனது பிறந்நாளாகும். நான் தகவல் தொழில்நுட்பத்தில் (செயலி மேம்படுத்தல், விரிவுரையாளர்) , உளவியலில் (மதியுரை), இதழியலில் (படைப்பாக்கம்) புலமை பெற்றேன். நானொரு பாவலன் (கவிஞன்) ஆயினும் கட்டுரைகள். சிறுகதைகள், தொடர்கதைகள், நாடகங்கள் எனப் பல எழுத முடியும்.

நான் சத்தியபாமா என்பவரை 29 ஐப்பசி 2001 இல் திருமணம் செய்தேன். துரைச்சாமி, இராஜேஸ்வரி குடும்பத்தினரின் மூத்தமகள் தான் சத்தியபாமா ஆவார். அவர் க.பொ.த, உ/த (இலங்கை அரச பாடத்திட்டம்) வரை கல்வி கற்ற ஒருவராவார். யாழ் மாவட்டம், சாவகச்சேரியில் உள்ள கல்வயல் என்ற ஊரே அவரது சொந்த ஊராகும். நானும் எனது இல்லாளும் மகிழ்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பகுதி - 3

முதலில் நான் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கணித பாடம் கற்பித்தேன். என்னிடம் முதலாம் ஆண்டு தொடக்கம் பத்தாம் ஆண்டு வரையான மாணவர்கள் கற்றனர். அவ்வேளை நான் இலங்கை அரச பாடத்திட்டத்திற்கு அமைவாகவே அவர்களுக்குக் கற்பித்தேன். பின்னர், நான் எழுதுனராகப் பல தனியார் நிறுவனங்களில் பணியாற்றினேன். பின்னர், நான் கணினிப் பாடநெறிகளைக் கற்பித்தேன். அதேவேளை வலைத்தள வடிவமைப்புகளுடன் மென்பொருள் மேம்படுத்தும் பணியையும் செய்தேன். உண்மையில், நான் இலங்கையின் எப்பாகத்திலும் சரி நிரந்தர வேலை ஒன்றைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போய்விட்டது.9

நான் முகவர் நிறுவனமொன்றில் பணம் செலுத்தி வெளிநாடு செல்ல முயற்சி எடுத்தேன். இம்முயற்சி பயனளிக்காமையால் குறித்த முகவர் நிறுவனத்தில் செலுத்திய பணம் மீளப் பெற முடியாது இழப்பைச் சந்தித்தேன். அரச பணியில் இணைவதற்கும் முயற்சி எடுத்தேன். அவ்வரச பணிக்கான நுழைவுத் தேர்வு எழுத முடியாமல் போனதால்; அவ்அரச பணியில் இணைய முடியாமல்

போயிற்று. நான் மேற்காணும் பணிகளில் இலங்கையில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நிறுவனங்களில் பணியாற்றினேன்.

நான் நிறுவனமொன்றிலும் கிளை முகாமையாளராகவும் பணியாற்றி இருந்தேன். நான் விடுதி (ஹொட்டல்) ஒன்றிலும் சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டியாகவும் பணியாற்றி இருந்தேன். நான் வணிக நிறுவனமொன்றில் விற்பனை முகவர் (பிரதிநிதி) ஆகப் பணியாற்றினேன். நான் வணிக நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் உதவியாளராகப் பணியாற்றினேன். நான் செய்தித் தாள் நிறுவனமொன்றில் செய்தியாளராகவும் பணியாற்றினேன். நான் தனியார் கல்வி நிறுவனமொன்றில் மாணவர்களுக்கான மதியுரைஞராகப் பணியாற்றினேன். நான் மருத்துவ நிறுவனம் ஒன்றிலும் கிளை முகாமையாளராகவும் பணியாற்றி இருக்கிறேன்.

நான் ஏன் மேற்காணும் தற்காலிகப் பணிகளில் துயரப்பட்டேன். ஒரே ஒரு காரணம், நான் பல்கலைக்கழகப் பட்டம் எதனையும் படித்து முடித்திருக்கவில்லை. இலங்கை இனச் சிக்கல் காரணமாக வெவ்வேறு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து இருந்தேன். அதனால், வெவ்வேறு மாவட்டங்களில் நான் பணியாற்றி உள்ளேன்.

நான் இப்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றுகின்றேன். அதேவேளை வீட்டில் இருந்தவாறு நான் தனிப்பட்ட தொழிலைச் செய்கின்றேன். அதாவது எனது சொந்த ஊரில் எனது வீட்டில் இருந்தவாறு "யாழ் மென்மொருள் தீர்வுகள் (Yarlsoft Solutions)" என்ற பெயரில் தனித்துவமாகத் தகவல் தொழில்நுட்ப விரிவுரை, வலைத்தள வடிவமைப்பு, வலைத்தளம் இணைத்தல் (ஹோஸ்டிங்), மென்பொருள் மேம்படுத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறேன். நான் இணைய வழியில் உளநல மதியுரை வழங்கும் பணியையும் செய்கின்றேன்.

உண்மையில் எனது வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டி. ஒவ்வொருவரும் கண்டிப்பாக உயர் கல்வித் தகமையைக் (பல்கலைக் கழகப் பட்டம் அல்லது உலகலாவிய பட்டயக் (டிப்புளோமா) கல்வி) கற்று முடித்திருக்க வேண்டும். அதேவேளை நிரந்தரத் தொழிலையும் தேடிப் பிடித்திருக்க வேண்டும். இவற்றை அடைய முடியாவிடின், அதிக பட்டறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை சொந்தமாக ஒரு நிறுவனத்தைத் திறக்கலாம் அல்லது என்னைப் போல தனித்துவமாக ஏதாவது ஒரு தொழிலைச் செய்யலாம். எனது வாழ்க்கை ஒரு திறந்த பொத்தகம்; அது ஒவ்வொருவருக்கும் நல்ல வழிகாட்டல்.

பகுதி - 2

நான் பல நண்பர்களைச் சந்தித்தேன்; அவ்வேளை சிலவற்றைக் கற்றுக்கொண்டேன்; அதனை நான் உங்களுடன் பகிருகிறேன். கெட்ட நண்பர்களுடன் இணைய வேண்டாமென பெற்றோரும் மற்றும் பெரியோரும் எனக்கு வழிகாட்டினர். நான் நண்பர்களாகச் சேர்க்கும் வேளை; எவர் நல்லவர், எவர் கெட்டவர் என்று நானறியேன். இது எனது பதினைந்தாம் அகவைக் காலம்.

எனக்குப் பெண் நண்பர்கள் இருந்த வேளை; நான் அன்பான பெண்களுடன் மென்மையாகக் கதைத்துப் பேசிப் பேணினேன். எப்படி இருப்பினும் எந்தப் பெண்ணும் என்னைக் காதலிக்கவில்லை. இது எனது பதினெட்டாம் அகவைக் காலம்.

"நீ படிப்பைத்/கல்வியைத் தொடராவிட்டால், நீ ஒரு முட்டாளாகத் தான் இருக்கமுடியும்." எனச் சில நண்பர்கள் எனக்கு வழிகாட்டினர். இது எனது இருபத்தைந்தாம் அகவைக் காலம்.

அதனால் தான், நான் கணினி/ தகவல் தொழில் நுட்பங்கள் உடன் மென்பொருள் மேம்படுத்தல், ஊடக அறிவுடன் இதழியல், உளவியல், உளச் சிகிச்சைகள், வழிகாட்டலும் மதியுரையும், மற்றும் சுகாதாரமும் மருத்துவமனை முகாமைத்துவமும் கற்றேன். நான் கனக்கக் கற்க வேண்டுமென இப்பவும் எண்ணிப் பார்க்கிறேன். அவ்வேளை நான் அதனால் மகிழ்வடைவேன்.

2001 இலிருந்து இணைய வழி நண்பர்கள் எனக்கு உள்ளனர். ஆனால், எவரும் தமது உண்மைத் தகவலை வெளிப்படுத்தியதில்லை. எப்போதுமே அவர்கள் போலித் தகவலையே வெளிப்படுத்துவர். இதனால் பலர் அவர்களை நம்பி, தமது வாழ்வையும் இழந்துள்ளனர். நானும் அல்லவா ஒரு தடவை தோற்றுப் போனேன். என்னையும் அவர்கள் முட்டாளாக்கி விட்டனர். தற்போது (2009 இன் பின்) நான் அதிக நண்பர்களை மக்களாய (சமூக) வலைத்தளங்கள் ஊடாகப் பேணுகிறேன் (Google+, Face book, Twitter, and LinkedIn). அவர்கள் எனக்கு நல்ல வழிகாட்டியாகவும் உள்ளனர்.

நான் எனது வாழ்வில் பல வகையான அதிக நண்பர்களைச் சந்தித்தேன். நான் அவர்களிடம் நிறையக் கற்றேன். என் வாழ்விற்கு அவை உதவுகின்றது. எப்படியிருப்பினும் அவர்கள் ஒரு காலத்தில என்னிடமிருந்து பிரிந்து போயினர்.

ஆகையால், நான் மக்களாய (சமூக) வலைத்தளங்களுக்குள் நுழைந்து நல்ல நண்பர்களைத் தேடுகிறேன். நான் எனது அறிவை, திறமையை, பட்டறிவை (அனுபவத்தை), நல்ல நடத்தைகளை, மற்றும் நல்லன எல்லாம் மக்களாய (சமூக) வலைத்தளங்கள் ஊடாகப் பகிருகிறேன். என்னைப் பற்றித் தாங்கள் மேலுமறிய, தாங்கள் என்னோடு தொடர்பாடலை மேற்கொள்ளலாம். தாங்கள் விரும்பினால் மேற்காணும் ஏதாவதொரு மக்களாய (சமூக) வலைத்தளத்தில் உறுப்பினராக இருப்பின் எனது வழிகாட்டலையும் மதியுரையையும் பெறலாம்.

எப்படி இருப்பினும் நான் எல்லா நண்பர்களிடம் இருந்தும் அதிகமாக நல்லதும் கெட்டதும் அல்லது இரண்டுமே கற்றுக்கொண்டேன். எப்பொழுதும் நான் நல்லதையே நண்பர்களிடம் காண்கிறேன்; அதனால் நான் இப்போது சரியான ஆள். நான் நண்பர்களாலேயே பல வெற்றிகளைக் குவித்தேன் என்பதை நான் தங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன். நட்புறவு முக்கியம். அதிலும் நாம் நல்ல நண்பர்களைக் கண்டுபிடிப்பதும் அல்லது பேணுவதும் தான் மிக முக்கியம். நல்ல நட்புறவு சிறந்த மக்களாயத்தைத் (சமூகத்தைத்) தரும் என்பதை நான் உணருகிறேன்.

## எனது முன்னேற்றம்

நான் 1969 ஐப்பசி ஏழாம் நாள் இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டம், மாதகலூரில் பிறந்தேன். பின்னர் நான் 1973 வரை பெற்றோரின் கைகளிலே தவழ்ந்தேன். அவர்கள் என்னை அன்போடு அரவணைத்துப் பேணினர். எனது பெற்றோர் 1974 தொடக்கம் 1975 வரை பாலர் (அரிவரி) வகுப்புகளில் படிக்க ஒழுங்கு செய்தனர். அக்காலத்தில் அவர்கள் வெவ்வேறான ஆறு ஆசிரியர்களிடம் ஆறு வகுப்புகளில் படிக்க ஒழுங்குபடுத்தினர். அக்காலத்தில் பள்ளி மாணவர்களுடன் விளையாடியதோடு மழலைக் கல்வியில் மகிழ்ந்து இருந்தேன்.

நான் 1976 இல் முதல் அரச பள்ளியில் முதலாம் வகுப்பில் இணைந்தேன். அங்கு நான் விளையாட்டு, பேச்சு, மற்றும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்கு பற்றினேன். எனது ஊரில் நான் முதலில் இணைந்த அந்தப் பள்ளிக்கூடத்தின் பெயர் யா/விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகும். எனது ஊரின் மத்தியில்

**This Page is a part of http://kasig1.yarlsoft.com/**

உள்ள இந்தப் பள்ளிக்கூடம் இந்துக்கள் மத்தியில் பெயர் பெற்று விளங்கியது. நான் ஐந்தாம் வகுப்பு வரை இந்தப் பள்ளிக்கூடத்திலேயே தொடர்ந்து கல்வி கற்றேன். பின் இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டு விலகினேன்.

நான் 1981 இல் இரண்டாம் அரச பள்ளியில் ஆறாம் வகுப்பில் இணைந்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தின் பெயர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகும். அங்கு நான் விளையாட்டு, பேச்சு, மற்றும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்கு பற்றினேன். அங்கு நான் சாரணியக் குழுவிலும் பங்குபற்றி இருந்தேன். தவிர்க்க முடியாத காரணத்தால் நான் ஒன்பதாம் வகுப்பு முதலாம் தவணைக் காலத்தின் பின் அந்தப் பள்ளிக்கூடத்தில் தொடர்ந்து படிக்கவில்லை. பின்னர் 1984 வைகாசியில் நான் ஒன்பதாம் வகுப்பு இரண்டாம் தவணைக் காலத்தில் இருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்க வேறொரு அரச பள்ளியில் இணைந்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தின் பெயர் தெல்லிப்பளை யா/மகாஜனாக் கல்லூரி ஆகும்.

தெல்லிப்பளை யா/மகாஜனாக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த வேளை 1985 மார்கழியில் எழுத வேண்டிய க.பொ.த. (சா/த) இறுதித் தேர்வில் என்னால் எழுத முடியவில்லை. ஆகையால், நான் மீண்டும் க.பொ.த. (சா/த) வகுப்பைத் தனியார் கல்வி நிலையமொன்றில் படித்தேன். அதேவேளை 1987 க.பொ.த. (சா/த) இறுதித் தேர்விற்குத் தயாராகினேன். ஆனால், நாட்டில் இனச் சிக்கலால் அத்தேர்வு 1988 சிறப்பு ஆடி இற்குப் பிற்போடப்பட்டது. பின்னர் அத்தேர்வு எழுதி ஆறு பாடங்களில் சிறப்புச் சித்தியும் இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றேன்.

க.பொ.த. (சா/த) என்பதன் விரிவாக்கம் 'கல்விப் பொதுத் தராதரம் (சாதாரண தரம்)' ஆகும். தமிழ், ஆங்கிலம், வர்த்தகமும் கணக்கியலும், கணிதம், சுகாதாரம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும் விஞ்ஞானம், சைவசமயம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியும் நான் பெற்ற பெறுபேறுகளாகும்.

நான் 1989 இல் நான்காம் அரச பள்ளியில் பதினோராம் வகுப்பில் இணைந்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தின் பெயர் சித்தன்கேணி யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகும். ஆயினும் அப்பள்ளிக்கூடத்தில் பன்னிரண்டாம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி கற்றேன். பின்னர் நான் 1990 இலும் 1991 இலும் க.பொ.த. (உ/த) இறுதித் தேர்வு எழுதினேன். ஆனால், நான் சாதாரண சித்தி ஒன்றையே பெற்றேன். க.பொ.த. (உ/த) என்பது பதினோராம் பன்னிரண்டாம் வகுப்புகளை உள்ளடக்கியதாகும்.

க.பொ.த. (உ/த) என்பதன் விரிவாக்கம் 'கல்விப் பொதுத் தராதரம் (உயர் தரம்)' ஆகும். இரசாயனவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியின்மையும் பௌதிகவியல் பாடத்தில் சாதாரண சித்தியும் நான் பெற்ற பெறுபேறுகளாகும்.

எனது தாய்மொழி தமிழ்மொழியாகும். ஆனால், நான் ஆங்கில மொழியையும் சிங்கள மொழியையும் கற்றுள்ளேன். ஆகையால், நான் மும்மொழிகளிலும் எழுதும் ஆற்றல், பேசும் ஆற்றல் கொண்டுள்ளேன். நான் மேற்காணும் மும்மொழிகளில் எவருடனும் தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

பின்னர் கொழும்பு மாவட்டத்தில் முன்னணி தனியார் கல்வி நிறுவனங்களில் நான் கணினி/ சிறப்புத் தகவல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்றேன். கணினிக் கல்வி பட்டய (டிப்புளோமா) வகுப்பு, கணினி நிகழ்நிரலாக்க (புரோக்கிராமிங்) பட்டய (டிப்புளோமா) வகுப்பு ஆகியவற்றை மேற்காணும் கல்வி நிறுவனங்களில் கற்றேன். அடுத்து நான் கீழ்வரும் அரசாங்கத் தகுதிகாண் தேர்வுகளில் தேறியிருந்தேன்.

1. கணினிச் செயலிகளில் தேசியச் சான்றிதல் (NCCA).
2. இலங்கைக் கணினி இயக்குனர் அனுமதிப் பத்திரம் (SLCDL).
3. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேசியத் தேர்வு (NEICT).

நான் பாக்கள், கதைகள், நகைச்சுவைகள், நாடக உரையாடல்கள் எழுதினேன். அதனால், இதழியலில் அதிக நாட்டம். எனது பதிவுகள் அச்சு மற்றும் இலத்திரன் ஊடகங்களில் வெளியாகின. ஆகையால், கடித (தபால்) மூலக் கல்வியில் இதழியல் பட்டயப் (டிப்புளோமா) பாடநெறியைப் படித்து முடித்தேன். நான் அதிக வாழ்க்கைச் சிக்கலுக்கு முகம் கொடுத்தேன். அவ்வேளை நான் தகுதியானவர் பலரிடம் வழிகாட்டலைப் பெற்றேன். நான் வாழ்வில் துயரப்பட்ட வேளையில் எல்லாம் அதிக உளவியல் வழிகாட்டலைப் படித்திருக்கிறேன். ஆகையால், கடித (தபால்) மூலக் கல்வியில் உளவியல் பட்டயப் (டிப்புளோமா) பாடநெறியைப் படித்து முடித்தேன். இப்போது நான் இணைய வழியில் உளவியல் சார்ந்த வழிகாட்டலும் மதியுரையும் வழங்கி வருகின்றேன்.

நான் மருத்துவமனைகளில் வேலை செய்ய வாய்ப்புக் கிட்டுமென்ற நோக்கில் கடித (தபால்) மூலக் கல்வியில் சுகாதாரமும் மருத்துவமனை முகாமைத்துமமும் பட்டயப் (டிப்புளோமா) பாடநெறியைப் படித்தேன். ஆனால், நான் தவிர்க்க முடியாத காரணத்தால் இப்பாடநெறிக்கான தேர்வு எழுத முடியவில்லை. எப்படியோ நான் சிகிச்சை நிலையமொன்றில் பணியாற்றுகின்றேன். நான் தமிழ் இலக்கியம் எழுதுவதிலும் அச்சு மற்றும்

**This Page is a part of http://kasig1.yarlsoft.com/**

இலத்திரனியல் இதழியலிலும் உளவியல் வழிகாட்டல் மற்றும் மதியுரையிலும் வலைத்தளம் மற்றும் மென்பொருள் மேம்பாட்டிலும் அமைப்புப் பகுப்பாய்வும் வடிவமைப்பிலும் கணினி திருத்துதலிலும் மேலும் பலவற்றையும் அறிந்துள்ளேன். நான் ஒரு தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளரும் ஆவேன்.

நான் பல நிறுவனங்களில் பல பதவி நிலைகளில் பணியாற்றியுள்ளேன் (எடுத்துக்காட்டாக: கணித ஆசிரியர், கணினி விரிவுரையாளர், பாவலர், எழுத்தாளர், இதழியலாளர், சுற்றுலா வழிகாட்டி, மதியுரைஞர், நிகழ்நிரலாக்குனர், வலைவடிவமைப்பாளர், அமைப்புப் பகுப்பாய்வாளர், செயலி மேம்படுத்துனர்). நான் இப்போது படித்தவர் என்று கருதினால், பல வழிகளில் பலவற்றைப் படித்துள்ளேன். ஆகையால், நான் பல தொழில்நுட்பத் துறைகளில் நுழைந்தேன், அதுவே எனது கமுக்கம் (இரகசியம்) என்பேன்.

நான் விளையாட்டிலும் பங்குபற்றி இருந்தேன்; அவ்வேளை இளமை அகவையில் கால் பந்தாட்டத்தில் அதிக நாட்டம் இருந்தது. மதியுரை வழங்குவதும் எனது பொழுதுபோக்கு. சிலவேளைகளில் "உதவி ஏதும் செய்யாமல் எவராலும் மதியுரை வழங்கத் தானே முடியும்" என்று சிலர் என்னைத் திட்டுவதும் உண்டு. என்னால் தமிழில் நகைச்சுவை, கட்டுரை, பா/கவிதை, பாடல், குறுங்கதைகள், நெடுங்கதைகள் மற்றும் நாடக உரையாடல் போன்றன எழுத முடியும். ஆனால், நான் ஒரு முன்னணி (பிரபல) கலைஞர் இல்லை.

நான் இலங்கையிலுள்ள எல்லா இனங்களையும் சமமாகப் பேணுவது போலவே உலகிலுள்ள ஒவ்வொருத்தரையும் பேணுகிறேன்; அதுவே எனது கொள்கை. நான் கற்ற எல்லாவற்றையும் தேவைப்படுவோருக்கும் விரும்பியோருக்கும் பகிருவதே எனது விருப்பமாகும்; அதுவே, எனது இலக்கும் ஆகும். நான் உயர்கல்வியைத் தொடர முடியாமையால் நானொரு பல்கலைக்கழகப் பட்டம் எதனையும் பெறாத ஒருவரானேன். ஆகையால், அது எனக்கு அதிக துயரம் தான். ஆனால், மாற்றாருக்குப் பயன்மிக்க பணிகளைச் செய்வதனால் நான் அத்துயரைப் போக்கிக்கொள்கிறேன்.

இங்கே நான் குறைந்த தகுதியைக் கொண்டிருக்கிறேன். உண்மையில் என்னிடம் பட்டப்படிப்போ உயர் பட்டயப் (டிப்புளோமா) கல்வியோ கிடையாது. ஆனால், இலங்கை அரச பாடத்திட்டப்படி க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) வகுப்புகளைப் படித்து முடித்தேன். நான் அரச மதிப்புக்குரிய (அங்கீகாரமிக்க) கணினித் தேர்வெழுதிய சான்றிதழ்களையும் வைத்திருக்கிறேன். ஆனால், நான்

கடித (தபால்) வழிக் கல்வி மூலம் உளவியல், இதழியல் கல்வியைக் கற்று முடித்தேன்.

உள்ளூரில் எனது வீட்டிலிருந்து என்னாலான சிறந்த பணிகளைச் செய்கிறேன். தனித்துவமாக (பிரத்தியேகமாக) விளம்பர வடிவமைப்பு வேலை, அமைப்புப் பகுப்பாய்வும் வடிவமைப்பும் வேலை, மென்பொருள் மேம்படுத்தும் வேலை, நடைபேசி மற்றும் இணைய வலைப்பக்க வடிவமைப்பு, மென்பொருள் மேம்படுத்தும் பயிற்சியளிக்கும் திட்டம் எனப் பல பணிகளைச் செய்கிறேன். எதிர்காலத்தில் யாழ் மென்பொருள் தீர்வுகள் (Yarlsoft Solutions) என்ற பெயரில் நிறுவனமொன்றைத் திறந்து இவ்வாறான எல்லாப் பணிகளையும் செய்யவுள்ளேன்.
வலைத்தள இணைப்பு: http://www.yarlsoft.com

கல்வியின் தொடக்கம் புளிப்பாகவே இருக்கும். நிறைவான (பழுத்த) கல்வி இனிப்பாகவே இருக்கும். இக்கருத்து என் வாழ்வில் உண்மையான ஒன்று. நான் கற்றதெல்லாம் உலகெங்கும் பரப்புகிறேன். ஆகையால், நான் மிகவும் மகிழ்வடைகின்றேன். என் தாய்மொழி தமிழ் என்பதால் வலைப்பூக்களைத் தமிழில் நடத்தினேன். முன்னதாக இதழியல், உளவியல், தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், மற்றும் எனது படைப்புகள் வெளியிடவென ஆறு வலைப்பூக்களை வைத்திருந்தேன். இப்போது யாழ்பாவாணன் வெளியீட்டகம் (Yarlpavanan Publishers) என்ற பெயரில் முன்னைய வலைப்பூக்களை எல்லாம் இணைத்து ஒரே வலைப்பூவைப் பேணுகின்றேன்.
வலைப்பூ இணைப்பு: http://www.ypvnpubs.com/

எனது இணைய வழிப் பணிகளைச் சுருக்கமாகக் கீழ்வரும் நடைபேசி வலைத்தளத்தில் அறிமுகம் செய்கின்றேன்.
நடைபேசி வலைத்தள இணைப்பு: http://kg1.wirenode.mobi

என்னிடம் தன்னம்பிக்கை இருக்கிறது. அதனால், மேற்காணும் வலைப் பக்கங்களை என்னால் பேண முடிகிறது. ஆனால், நான் உங்கள் வழிகாட்டலையும் கருத்துகளையும் மற்றும் உதவிகளையும் எதிர்பார்க்கின்றேன்.

## எனது நினைவூட்டல்

நான் இலங்கை எங்கும், தமிழ்நாடு மாநிலம் மற்றும் இந்தியாவின் முக்கிய இடங்களையும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். உண்மையில் எனக்கு உலகெங்கும் நிறைய நண்பர்கள் உண்டு. நான் அவர்களை நினைவூட்டுகிறேன். அவர்களது ஒத்துழைப்பு, அவர்களது வழிகாட்டலும் மதியுரையும், அவர்களது உதவிகள் யாவும் எனது ஒளிமயமான எதிர்காலத்தை அமைக்க உதவியது. என்னிடம் சிறியளவு அறிவே உண்டு; அதுவும் அதனைக் கடவுள் தரவில்லை. எப்போதும் அதிக மக்கள் எனக்குப் படிப்பித்தனர். அவ்வேளை அறிவைப் பெற்றுள்ளேன். கண்டிப்பாக நான் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முதலில் நான் பெற்றோரிடமும் அவர்களது சகோதரர், சகோதரி குடும்பத்தினரிடமும் படித்தேன். இரண்டாவதாக நான் தொடக்கக் கல்வியை (அரிவரி வகுப்பை) அடுத்தடுத்து ஆறு என்னூர் ஆசிரியர்களிடம் படித்தேன். மூன்றாவதாக மாதகல் யா/விக்னேஸ்வரா வித்தியாலயம், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யா/மகாஜனாக் கல்லூரி, சித்தன்கேணி யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

அடுத்து, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் நுகேகொடை நிலையத்தில் கணினி தொடக்க நிலை வகுப்பையும் யாழ்ப்பாண நிலையத்தில் B.Tec. பொறியியல் முதலாமாண்டு வகுப்பையும் படித்தேன். அடுத்து, பல பாடநெறிகளை பல தனியார் கல்வி நிலையங்களில் படித்தேன். அத்தனை கல்வி நிலையங்களின் பெயர்களையும் இங்கு குறிப்பிட முடியவில்லை.

நான் ஐந்நூறிற்கு மேற்பட்ட நூல்களைப் படித்திருக்கிறேன். அத்தனை நூலாசிரியர்களும் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களே! எப்படியிருப்பினும் அதிக வெளிநாட்டு விரிவுரையாளரிடம் கல்வி கற்றிருக்கிறேன். அவர்கள் இலங்கை வந்த வேளை இலங்கை நிறுவனங்களின் அரங்கிலே நடாத்திய கருத்தரங்குகள் ஊடாகக் கற்றேன். எடுத்துக்காட்டாக இந்தியா, மலேசியா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து எனப் பல நாடுகளைக் குறிப்பிடலாம். ஆசிரியர்கள், போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள் எனப் பலரை இந்தப் பக்கத்தில் என்னால் நினைவூட்ட முடியவில்லை என நான் நினைக்கின்றேன்.

**This Page is a part of http://kasig1.yarlsoft.com/**

நான் ஒன்றும் அரச பணியாளர் இல்லை; அதனால் நான் பல தனியார் நிறுவனங்களில் இணைந்திருந்தேன். நான் அவர்களுடன் பணியாற்றிய வேளை, அவர்கள் எனக்குத் தொழிற் பயிற்சிகளைத் தந்துதவினர். சில நிறுவனங்கள் திறமைசாலிகளின் பயிற்சிகளைப் பெற அனுமதித்தனர். அந்த வகையில் நிறுவனம் ஒன்றினூடாக 1997 ஆனி மாதம் மைக்குரோசொப்ட் மேம்படுத்துனர் நாள் (Microsoft Developer Day) பயிலரங்கில் கலந்துகொண்டேன்.

கண்டிப்பாக நான் எல்லோருக்கும் (ஆண், பெண் இணைந்த) நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது நான் நினைவூட்டிய அல்லது நினைவூட்டியிராத எனக்குப் படிப்பித்த எல்லோருக்கும் நன்றி.



மீண்டும், எனக்குப் படிப்பித்த எல்லோருக்கும் நான் உண்மையுடன் நன்றி கூறுகின்றேன்.